Chapter X*XIII Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
|---|---|---|
| Calendar | | SC.No.318/2023 |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | | |
| Deposition of Witness for | Prosecution | P.W.1 |
| | Defence | |
| Name | | திரு.நவநீதகிருஷ்ணன் |
| Father's Name | : | திரு.கிருஷ்ணா என்ற கிட்டுசாமி |
| Village | : | மேலசெவல் |
| Taluk | : | சேரன்மகாதேவி |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி(புகார்தாரர்) |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28th day of July 2026.

( 1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது மேலசெவலில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி முப்பிடாதி எனது தம்பி. சாட்சி சீனிவாசராகவன் என்பவரை தெரியும். சாட்சி அரவிந்தன் எனது மைத்துனர். இந்த வழக்கில் இறந்துபோன கிருஷ்ணன் என்ற கிட்டுசாமி எனது அப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். மேற்படி 6 பேரும் மற்றொரு இளஞ்சிறார் இந்த வழக்கில் உண்டு. எனது அப்பா 30 வருடங்களாக மேலசெவல் நவநீதபெருமாள் கிருஷ்ணன் கோவிலில் எனதுஅப்பா

பணிவிடை செய்து வந்தார். 6 எதிரிகளும், இளஞ்சிறாரும் கோவிலில் வந்து மது அருந்துவதை எனது அப்பா கண்டித்து கோவிலுக்குள்ளும், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளிலும் மது அருந்தவேண்டாம் என்றும், வேறு இடங்களுக்கு செல்லுங்கள் என்று சொன்னார். பொங்கலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு 6 எதிரிகளும், இளஞ்சிறாரும் எங்கள் வீட்டிற்கு வந்து கோவிலில் கூட்டி, பெருக்கும் வேலைக்கார நாயே உன்னை அடித்தால் யார் கேட்டார் என்று சொல்லி கல்லை தூக்கி வீட்டிற்குள் போட்டுவிட்டார்கள். பின்னர் 15.01.2023 அன்று பொங்கல் அன்று அன்னாவி மூடுக்குதெருவில் நானும், தாசும் நின்றுகொண்டிருக்கும்போது பாலசந்தர் பைக்கை ஓட்ட கொம்பையாவும், பற்பநாதனும் இருவரும் பின்னால் அமர்ந்துகொண்டும், ஐயப்பன் பைக்கை ஓட்ட, அருண் இசக்கிமுத்துபாண்டியும், மாரியப்பனும் பின்னால் ்அமர்ந்துகொண்டு உனக்கு ஒரு நாள் இருக்கிறது என்று சொல்லி பைக்கை வேகமாக ஓட்டிக்கொண்டு கோவிலை பார்க்க சென்றுவிட்டார்கள். அன்றையதினம் அதிகாலையில் எனது அப்பா வீட்டில் பொங்கல் வைத்துவிட்டு கோவிலுக்கு சென்றவர் திரும்பிவரவில்லை என்று நானும், எனது தம்பியும் 3.45 மணிக்கு சாப்பாடு கொண்டு நவநீதகிருஷ்ணபெருமாள் கோவிலுக்கு சென்றோம். கோவிலில் சீனிவாசன ராகவன் மற்றும் அவரது மச்சினன் அரவிந்தன் ஆகியோர் இருந்தார்கள். அவர்களிடம் சென்று எனது அப்பா எங்கே என்று கேட்டேன். அவர்கள் என் அப்பா பின்னால் இருப்பார் என்று சொன்னார்கள். உடனே நான் வடப்பக்கம் சென்று பார்த்தேன். கொம்பையா, பாலசுந்துரு, பற்பநாதன், அருண்இசக்கிமுத்துபாண்டி, செல்லக்குட்டி என்ற கட்டதுரை, மாரியப்பன், ஐயப்பன் ஆகியோர்கள் சேர்ந்து குடிப்பதற்கு

நீ தான் இடைஞ்சலாய் இருக்கிறாய் என்று சொல்லி எனது அப்பாவை அரிவாளால் தலையில் வெட்டி கொலை செய்துவிட்டார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஐந்து அரிவாள்களையும் எதிரிகள் அன்று சம்பவத்தின்போது வைத்திருந்து எனது அப்பாவை மண்டையில் வெட்டினார்கள். அந்த அரிவாள்கள் **சா.பொ.1** முதல் **சா.பொ.5** வரை ஆகும். அதன்பிறகு எனது அப்பா கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்துவுடன் எதிரி மாரியப்பனும், ஐயப்பனும் கையில் வைத்திருந்தார்கள். அந்த கத்தியால் இடதுகைபுஜம், இடதுமுதுகு, நடுமுதுகு ஆகிய இடங்களில் குத்தினார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது ஒரு கத்தி, மற்றொன்று கைப்பிடியுடன் கூடிய கத்தியை வைத்து தான் எனதுஅப்பாவை குத்தினார்கள். அந்த கத்திகள் **சா.பொ.6** மற்றும் **சா.பொ.7** ஆகும். ஐயப்பனும், மாரியப்பனும் சேர்ந்து இடதுகைபுஜம் ஆகிய இடங்களில் குத்தியதால் எனது அப்பா சத்தம்போட்டதால் பூசாரியும், அவரது மைத்துனரும் வெளியே வந்து பார்த்தார்கள். எங்களை பார்த்து கிட்டே வந்தால் உங்களுக்கும் இதே கதி தான் என்று அரிவாளை காட்டி மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு கோவிலுக்கு வந்த பக்தர்களும் வந்து பார்த்துவிட்டு, கேட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். பின்பு 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தபோது எனது அம்மா, பரமசிவன், ஈனமுத்து, நாட்டாமைசுப்பிரமணியன் என்ற மூக்காண்டி ஆகியோர் வந்தார்கள். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் வந்து எனது அப்பாவை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். திருநெல்வேலி அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்தபோது மாலை 4.50 மணிக்கு எனது அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு இரவு 10.00 மணிக்கு போலிசார் வந்து

என்னிடம் புகார் எழுதிக்கொடுக்க சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.1** ஆகும். புகாரில் மேற்படி ஏழுபேரும் சேர்ந்து எனது அப்பாவை வெட்டி கொன்றுவிட்டார்கள் என்றும், எனக்கு கொலைமிரட்டல் கொடுத்துள்ளார்கள் என்றும் எழுதிக்கொடுத்துள்ளேன். பின்னர் 14.02.2023 ல் திருநெல்வேலி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5 ல் நீதித்துறை நடுவர் என்னை அழைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். மேற்படி பிரிவு 164 குவிமுச படியான வாக்குமூலம் **நீ.மா.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :–

மேலசெவலில் இந்து, முஸ்லீம் பிரிவை சார்ந்தவர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். தேவர் மற்றும் யாதவ சமுதாயத்தை சேர்ந்த மக்களும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். மேலசெவலை சேர்ந்த விஜயக்குமார் என்ற அப்பாத்துரையை தெரியும். அவர் தேவர் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 2023 ம் வருடம் மேலசெவலில் வைத்து விஜயக்குமார் என்ற அப்பாத்துரையை நான், எனது தம்பி முப்பிடாதி, மாயாண்டி, பேச்சிமுத்து ஆகியோர்கள் சேர்ந்து கொலை செய்துவிட்டதாக ஒரு கொலை வழக்கு முன்னீர்பள்ளம் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் புகார்தாரர் அவரது மனைவி இசக்கியம்மாள் என்றால் சரிதான். மேலசெவலில் யாதவ சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட முப்பிடாதி அம்மன் கோவில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கில் இறந்துபோன விஜயக்குமார் என்ற அப்பாத்துரையை ஆட்டோ ஓட்டுநர் என்றால்

சரிதான். முப்பிடாதியம்மன் கோவில் கொடைவிழா 2023 ஆண்டு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முப்பிடாதியம்மன் கோவில் கொடைவிழாவில் நானும், எனது தம்பியும் யாதவ சமுதாய கொடியை கையில் வைத்துக்கொண்டு ஆடியதால் ரோட்டில் ஆட்டோவை ஓட்டி வந்த விஜயகுமார் ரோட்டில் ஆடுகிறீர்களோ, கொஞ்சம் ஓரமாக ஆடக்கூடாதா என்று சொன்ன வகைக்கு நாங்கள் நால்வரும் சேர்ந்து எங்கள் ஜாதிக்காராங்களை பார்க்கும்போது பயம் வரணும்லே சாவுல தேவடியா மவனே என்று சொல்லி அரிவாளால் வெட்டிக்கொன்றதாக S.C.No.20/2024 என்ற ஒரு வழக்கு திருநெல்வேலி 3 வது மாவட்ட நீதிமன்றத்தில் எங்கள் பெயரில் நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. அது தவறான வழக்காகும். நவநீதகிருஷ்ணன் கோவில் ஊருக்கு பொதுவான கோவில் என்றால் சரிதான். இந்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட கோவில் என்றால் சரிதான். எனது அப்பா கிட்டுசாமி கோவில் அறநிலையத்துறை ஊழியரா என்றால் இல்லை. கோவிலை சுற்றி காம்பவுண்டு சுவர் உள்ளதா என்றால் உள்ளது. கோவில் கிழக்கு திசையை பார்த்து உள்ளது என்றால் சரிதான். கோவில் காம்பவுண்டில் இரண்டு இரும்பு கேட் உள்ளது என்றால் சரிதான். நவநீதகிருஷ்ணன் கோவிலுக்கு தலைவாசல் மட்டும் தான் உண்டு. பின்புறம் வாசல் கிடையாது என்றால் சரிதான். கோவிலில் உட்புறம் ஒரு பிரகாரம் உண்டு, வெளிப்புறம் ஒரு பிரகாரமும் உண்டு என்றால் சரிதான். கோவிலுக்கு வடபுறம் உள்ள வெளிப்பிரகாரத்தில் பூக்கள் செடிகள் உள்ள நந்தவனம் உள்ளது. கோவிலின் மெயின் வாசலுக்கும், நந்தவனத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 500 அடி இருக்கும் என்றால் சரிதான். கோவிலுக்கு உட்புறமும், உள்பிரகாரத்திலும் உள்ள நபர்கள் நந்தவனத்தை

பார்க்கஇயலாது என்றால் சரிதான். கோவிலுக்கு உள்ளே போவதாக இருந்தாலும், வெளியே வருவதாக இருந்தாலும் மெயின்கேட் வழியாக சென்றுவர முடியும் என்றால் சரிதான். கோவிலின் நுழைவுப்பகுதியில் 16 கல் தூண்கள் உள்ள கல்மண்டபம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கல் மண்டபத்தை பெரியவர்கள், வயதானவர்கள் பேசுவதற்கும், தூங்குவதற்கும் பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். எங்கள் வீடு கோவிலுக்கு மெயின்வாசலுக்கு தென்புறம் உள்ள பழைய கிராமம் பகுதியில் உள்ள முகப்பில் உள்ளது என்றால் சரிதான். கோவிலின் மெயின்வாசலுக்கும், எங்கள் வீட்டிற்கும் இடையில் சுமார் 200 அடி தூரம் இருக்குமா என்றால் 300 அடி தூரம் இருக்கும். கோவிலின் தலைவாசலுக்கும் எங்கள் வீட்டிற்கும் இடையில் சுமார் 300 அடி தூரம் இருக்குமா என்றால் 500 அடி தூரம் இருக்கும். சம்பவம் தினம் பொங்கல் தினம் என்றால் சரிதான். எனது அப்பா அதிகாலை 5.30 மணிக்கு வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார். கோவிலுக்கு சென்றவர் வீட்டிற்கு திரும்பவில்லை என்றால் சரிதான். காலையில் எனது அப்பா எங்கு சாப்பிட்டார் என்று தெரியாது. எனது அப்பா காலையில் சாப்பிட்டாரா அல்லது இல்லையா என்று யாரையாவது கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நவநீதகிருஷ்ணன் கோவில் ஒருகால பூஜை மட்டும் நடதப்படுகிற கோவில் தெரியுமா என்றால் தெரியாது. கோவிலின் நடை காலை 7.00 மணிக்கு திறக்கப்பட்டு காலை 10.00 மணியளவில் மூடப்படும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது தகப்பனார் இறந்த அன்று மதியம் 3.00 மணி வரை சாப்பிட வீட்டிற்கு வரவே இல்லை என்று சொல்வது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்றால் சரியல்ல. எனது அப்பா சாப்பிட வீட்டிற்கு வராததால் நானும், தம்பியும் கோவிலுக்கு

சாப்பட்டை எடுத்துக்கொண்டு சென்றோம் என்று சொல்வதும் உண்மைக்கு முற்றிலும் புறம்பலானது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் மதியம் 1.00 மணியளவில் வீட்டிற்கு வந்த பொங்கல் சாப்பாடு சாப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. எந்த பாத்திரத்தில் சாப்பாடு கொண்டு போனோம் என்றால் தூக்குச்சட்டியில் கொண்டு சென்றோம். சாப்பாடு கொண்டு வந்த தூக்கிச்சட்டியை எனது அப்பா பார்க்கபோகிற வழியிலேயே தரையில் போட்டுவிட்டேன். அதன்பிறகு அந்த தூக்குசட்டியை நான் எடுக்கவே இல்லை . அது அந்த இடத்திலேயே தான் கிடந்தது. என்னிடம் என் தம்பியிடம் செல்போன் இருந்தது. எனது அப்பாவை பார்த்தவுடன் உடனடியாக போலீஸ் ஸ்டேஷசனுக்கு போனில் தகவல் சொன்னோமா என்றால் இல்லை. எங்கள் ஊரில் எங்களுடைய உறவினர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். எனது அப்பா இறந்துகிடந்த தகவல் ஊர் முழுவதும் பரவி ஊர்க்காரர்கள், எங்கள் சொந்தக்காரர்கள் உடனடியாக எனது அப்பாவை இறந்துகிடந்த பார்க்கவந்தார்களா என்றால் 3 பேர் பார்க்கவந்தார்கள். மூக்காண்டி, ஈனமுத்து, பரமசிவன் ஆகிய மூன்றுபேரும் வந்தார்கள். மேற்படி 3 நபரை தவிர வேறுயாரும் வரவில்லை. மேற்படி மூவரும் முன்னீர்பள்ளம் காவல்நிலையத்திற்கு எனது அப்பாவின் இறப்பு குறித்து தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. நான் இறந்துகிடந்த எனது அப்பாவை கிட்டபோய் பார்த்தேனோ என்றால் பார்த்தேன். எனது அப்பாவை புறட்டிப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனது கைகள் மற்றும் உடைகளில் எனது அப்பாவின் ரத்தம் பட்டது என்றால் சரிதான். எனது தம்பி முப்பிடாதியின் கை மற்றும் உடைகளும் ரத்தம் பட்டது என்றால் சரிதான். எனது அப்பா கீழே விழுந்துகிடந்த இடத்தில் தரையில் ரத்தம் சிந்தி பெருகி கிடந்தது என்றால் சரிதான். ரத்தம்பட்ட சட்டையுடன் தாக்

எனது அப்பாவின் ரத்தம்பட்ட உடைகளுடன் தான் போனேன் என்றால் சரிதான். போலீஸ் ஸ்டேஷனில் எனது உடை மற்றும் எனது தம்பியின் உடைகளை ஆய்வாளர் பார்த்தார்கள் என்றால் சரிதன். எங்களிடம் இருந்த ரத்தம்பட்ட உடைகளை ஆய்வாளர் பெற்றுக்கொண்டாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் மருத்துவமனையில் வைத்து எழுதப்பட்டது. அ.சா.ஆ.1ல் உள்ள எனது கையெழுத்து வேறுவிதமாக உள்ளது. புகாரில் உள்ள வாசகங்களும் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டதாக உள்ளதா என்றால் வித்தியாசம் இல்லை. அ.சா.ஆ.1ஐ பார்த்தமாத்திரத்தால் வெவ்வெறு நபர்களால் எழுதப்பட்டது என்று தெரியும் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரில் உள்ள வார்த்தைகள் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு புகார் மனு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு இர்ண்டு மாதங்களுக்கு முன்னர் எங்கள் வீட்டில் கல்லை எறிந்தது சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் எதிரிகள் எங்கள் வீட்டில் கல்லை எறிந்ததாக சொல்வது உண்மையல்ல என்றும், அந்தமாதிரியான எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதனால் தான் எந்த புகாரும் அதுகுறித்து கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதி'யில் கோவிலில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுயிருந்த விவரம் தெரியுமா என்றால் சிசிடிவி கேமரா இல்லை. கண்காணிப்பு கேமரா எனது தகப்பனார் இறந்த தேதியில் இருந்தது என்றால் இல்லை. கண்காணிப்பு கேமராவில் இருந்த பதிவுகள்

நான் கொடுத்த புகாருக்கு முற்றிலும் விரோதமாக இருந்ததால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எனக்கும், எனது குடும்பத்திற்கும் சமூக வேறுபாடுகள் ரீதியில் ஏராளமான விரோதிகள் இருந்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேலசெவல், கோபாலசமுத்திரம் ஆகிய கிராமங்கள் முன்னீர்பள்ளம் காவல் நிலையத்திற்கு உட்பட்டவை என்றால் சரிதான். மேற்படி கிராமங்களில் சமுக வேறுபாடுகள் காரணமாக ஏராளமான கொலை சம்பவங்கள் நடந்துள்ளது என்றால் அது நடந்து வருகிறது. எனது தகப்பனார் அதிகாலையில் கோவிலுக்கு சென்றவர் அடையாளம் தெரியாத மர்மநபர்களால் தாக்கப்பட்டு யாரும் பார்க்காத நிலையில் இறந்துகிடந்துள்ளார் என்றால் சரியல்ல. வெகுநேரம் கழித்து பார்த்து தெரிந்துகொண்ட வழிப்போக்கர்கள் பார்த்து தெரிந்து ஊர்க்காரர்களுக்கு தெரிந்து அவர்கள் தகவல் சொல்லி எங்கள் குடும்பத்திற்கு தெரியவந்து நாங்கள் சம்பவ இடத்திற்கு காலதாமதமாக வந்தோம் என்றால் சரியல்ல. சம்பவத்தில் ஈடுபட்ட உண்மையான நபர்கள் யாரென்று தெரியாதநிலையில் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து மட்டும் பெறப்பட்டு பின்னிட்டு ஆலோசனை செய்து இந்த எதிரிகள் பொய்யாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 2வது எதிரியின் சொந்த ஊர் எனத என்றால் மேலசெவல். நான் கொடுத்த புகாரிலும், எனது விசாரணை வாக்குமூலத்திலும் 2ம் எதிரியின் ஊர் மேலசெவல் என்று தான் சொல்லியுள்ளேன். அவர் மேலச்செவலில் எங்கு குடியிருக்கிறார் என்றால் மேலச்செவல் வடக்குதெருவில் குடியிருக்கிறார். அவரது தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுக்கும்போது தகப்பனாரின் பெயர் மற்றும் ஊர்

விவரங்கள் சொல்லியுள்ளேனா என்றால் பதற்றத்தில் என்ன சொல்லியுள்ளளேன் என்று ஞாபகமில்லை. 2 வது எதிரிக்கு சொந்தஊர் மேலச்செவல் என்று நான் சொல்வது உண்மையல்ல என்றால்ச ரியல்ல. எனது அப்பா இறப்பதற்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்பு வீரவநல்லூரில் இந்திராநகரில் குடியேறிவிட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பதற்கு ஒரு வாரம் முன்பு விபத்தினால் வலது கால் தொடை எலும்பு முறிந்து மருத்துவமனையில் இரும்பு தகடு பொருத்தப்பட்டுயிருந்தது என்றால் அவ்வாறு பொருத்தப்பட்டவில்லை. சமுதாய ரீதியாக பகைகளை தேடிவைத்துக்கொண்டு எனது தகப்பனார் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்துபோய்வுள்ளார். நான் சம்பவத்தை பார்த்தாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. சான்றுப்பொருட்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சான்றுப்பொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>3 மற்றும் 6 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

எங்கள் ஊரின் பக்கத்தில் பத்தமடையில் அரசுமருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அடுத்து சேரன்மகாதேவியில் அரசுமருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊரில் மூன்று தனியார் மருத்துவமனைகள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊர் மேலச்செவல் சந்திப்பில் எப்போதும் போலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றால் கிடையாது. எப்பொழுதும் முன்னீர்பள்ளம் போலிசார் பாதுகாப்பு பணியில் இருப்பார்கள் என்றும் வழக்கிற்காக நான்

இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் அவ்வப்போது சுற்றுமுறை காவல்பணி செய்வார்கள். எனது அப்பாவை காப்பாற்றுவதற்கு எங்கள் ஊரில் மருத்துவமனைக்கோ, அருகில் உள்ள ஊர்களில் உள்ள மருத்துவமனைக்கோ கொண்டு செல்ல முயற்சி எடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து பத்தமடை சுமார் 1 கி.மீ துாரம் இருக்கும் என்றால் 4 கி.மீ துாரம் இருக்கும். வாகனத்தில் சென்றால் 10 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் 15 நிமிடங்களில் சென்றுவிடலாம். நான் சம்பவத்தன்று கோவிலுக்கு எனது அப்பாவிற்கு சாப்பாடு எடுத்து சென்றதாக சொல்வது உண்மையல்ல என்றும், அதனால் தான் எனது அப்பாவை காப்பற்ற எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரில் முஸ்லீம் பள்ளிவாசல் நான்கு உள்ளது என்றால் சரிதான். அங்கு சுமார் ஆயிரம் வீடுகள் இருக்குமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சம்பவத்தன்று கோவிலில் இருந்த நபர்கள் தகவல் சொல்லி போலிசார் அங்கு வந்தார்களா என்றால் வரவில்லை. என்னிடம்செல்போன் உண்டு என்றால் சரிதான். செல்போன் மூலமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் வரும்போது சுமார் மாலை 4.00 மணி இருக்குமா என்றால் இருக்கும். மருத்துவமனைக்கு வரும் வழியில் தான் முன்னீர்பள்ளம் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்துவரும்போது நானும், எனது உறவினர்களும் ஒன்றாக வந்தார்களா என்றால் இல்லை. நானும், எனது தம்பியும் 108 ஆம்புலன்சில் வந்தோம். மற்றவர்களுக்கு போன் மூலம் தகவல் சொன்னோம். மற்றவர்கள் ஊரில் இருந்து எனது சொந்த பந்தங்கள் சுமார் மாலை 4.30 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால்

நாங்கள் மருத்துவமனைக்கு சென்றபின்னர் தான் அவர்கள் வந்தார்கள். எங்கள் ஊரில் வி.ஏ.ஓ, தலையாரி உள்ளார்களா என்றால் உள்ளார்கள். சம்பவம் குறித்து எங்கள் ஊரில் இருந்த வி.ஏ.ஓ, தலையாரிக்கு தகவல் சொன்னோமா என்றால் சொன்னோம். எங்கள் ஊரில் இருந்து முன்னீர்பள்ளம் காவல்நிலையம் பத்து கி.மீ தூரம் இருக்குமா என்றால் 5 கி.மீ தூரம் இருக்கும். இருசக்கர வாகனத்தில் வந்தால் சுமார் 20 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ஏற்பட்ட சம்பவம் குறித்து ஊரில் என் சொந்தபந்தங்களுக்கு தெரிந்து அவர்கள் வரும் வழியில் காவல்நிலையத்திற்கு சென்றார்களா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு வந்தபிறகு இவ்வாறு சம்பவம் நடந்துவிட்டதாக காவல்நிலையத்திற்கு போன் மூலம் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. எனது உறவினர்களிடமாவது மருத்துவமனைக்கு வரும்போது காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு வா என் சொன்னீர்களா என்றால் இல்லை. குற்ற சம்பவம் நடந்ததால் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவேண்டும் என்ற தகவல் தெரியும் என்றால் சரிதான். மருத்துவமனையில் எனது அப்பாவை கொண்டு சேர்த்தபிறகு முன்னீர்பள்ளம் காவல்துறையினர் மருத்துவமனைக்கு உடனடியாக வந்தார்களா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கும் வரை போலிசாருக்கு இந்த சம்பவம் குறித்து தெரியாது என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அந்த விவரங்கள் எனக்கு தெரியாது. எனது அப்பா இறந்த பகுதியில் போலிசார் மோப்ப நாய் கொண்டு வந்து விசாரித்த விவரம் தெரியுமா என்றால் போலிசார் வந்தார்கள் என்ற விவரம் தெரியும். ஆனால் அவர்கள் விசாரித்த விவரங்கள் குறித்து எதுவும் தெரியாது. 3வது எதிரி எனது அப்பாவை வெட்டியதாக சொல்வது

உண்மையல்ல என்றால் சரியல்ல. 6வது எதிரி எனது அப்பாவை கத்தியால் தாக்கியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாவிடம் செல்போன் உண்டு என்றால் சரிதான். மதியம் வீட்டிற்குவரவில்லை என்று நானோ, எனது தம்பியோ எனது அப்பாவிற்கு போன் மூலம் தொடர்புகொண்டு கேட்டோமா என்றால் இல்லை. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கொத்தனார் வேலைக்கு காலையில் சென்றால் மாலை 6.00 மணிக்கு வருவேன் என்றால் நான் சம்பவகாலத்தில் கொத்தனார் வேலை பார்க்கவில்லை. ராபீன்கார்ஸ் கன்சல்டிங்கில் வேலை பார்த்தேன். அது எங்குள்ளது என்றால் புதிய பஸ்நிலையம் அருகில் உள்ளது. வழக்கமாக நான் அங்கு வேலைக்கு சென்றால் காலை 10.00 மணிக்கு சென்றுவிட்டு இரவு 10.00 மணிக்கு வருவேன். அன்று பொங்கல் விடுமுறை என்பதால் நான் வீட்டில் இருந்தேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்ப்பதால் அன்று எனக்கு விடுமுறை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொங்கலை முன்னிட்டு எனக்கு 3 நாட்கள் விடுமுறை கொடுத்திருந்தார்கள். எனக்கு விடுமுறை கொடுத்தாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் அன்று வீட்டில் இல்லாத காரணத்தினால் தான் எனது அப்பாவை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நான் வீட்டில் இல்லாத காரணத்தினால் தான் எனது அப்பா இறந்தது குறித்து காவல்நிலையத்தில் உடனடியாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் அன்னாவிமுடுக்கு தெருவில் நின்றுகொண்டுயிருந்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு

நீ.மா.சா.ஆ.2 வாக்குமூலம் கொடுப்பதற்கு போலிசார் தான் என்னை அழைப்பாணை கொடுத்து அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். என்னை போலிசார் அழைத்து செல்லும்போது என்னிடம் என்னென் சொல்லப்படவேண்டும் என்று எனக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டு அதன்படி நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா இனம்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு காயம் ஏற்படுத்தப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோன்று சொன்னநாள், சொன்னநேரத்தில் கோவிலுக்கு சென்றதாக சொல்வதும், அங்கு சம்பவத்தை பார்த்தாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 3 மற்றும் 6 வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது உறவினர்கள் உடனடியாக எதிரிகளை கைது செய்யவேண்டும் என்று சொல்லி சாலை மறியல் செய்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்தால் தான் பிரேதத்தை வாங்குவோம் என்று 4, 5 நாட்களாக பிரேதத்தை வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் போலிசார் நிர்பந்தத்தின் பேரில் எங்கள் சமுதாயத்தின் அழுத்ததின் பேரில் எதிரிகள் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளனார் என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள சான்றுப்பொருட்களுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு ஏற்பட்ட காயத்திற்றும் இந்த எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்தவர் எனது தந்தை என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

எனக்கு தமிழ் நன்கு, எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். தமிழில் எழுதசொன்னால் பிழையில்லாமல் எழுதமுடியும் என்றால் சரிதான். நான் கைப்பட எழுதிக்கொடுத்த புகாரில் பிழைகள் எதுவும் இல்லாமல் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரில் முகவரியில் பழையகிராமம் முதலில் எதுவும் இல்லை. சரியாக எழுதப்பட்டுள்ளது. புகாரில் 13 எழுத்துப்பிழைகள் உள்ளது என்றால் எனக்கு தெரிந்து எழுத்துபிழைகள் இல்லை. எனக்கு தெரிந்தவரையில் எழுதியுள்ளேன். அ.சா.ஆ.1 காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டதாக சொன்னபோது எனது அப்பாவின் மேல்உதடு, இடதுகண்புருவம், இடதுபக்க முதுகு, நடுமுதுகு ஆகிய இடங்களில் காயங்கள் காணப்பட்டதாக தங்களுக்கு தெரியாது என்றால் தெரியும். மேற்படி காயங்கள் குறித்து எனது புகாரில் குறிப்பிட்டுயிருந்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்தாக சொல்லக்கூடிய புகாரில் அப்பா கீழே விழுந்ததால் மூக்கின் மேல், வலதுகை புஜம், வலது மார்பில் கன்றிய காயங்கள், வலது கால் முட்டு, இடது கால் முட்டு, இடது கைமோதிரவிரல், நடவிரலில் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டதாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் நான் சொன்ன காயங்கள் இல்லை என்பதால் நான் எழுதிக்கொடுத்த புகார் இது இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து புகாரில் மனுவில் சொன்னேனா என்றால் சொன்னேன். புகார் மனுவில் எனது அப்பாவிற்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டதாக சொன்னேனா அதை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். புகாரில் கூறப்பட்ட காயங்களை தவிர வேறு காயங்கள் போலிசார் விசாரணையில்

சொல்லியிருந்தால் அது என்னால் சொல்லப்பட்ட வாக்குமூலம் அல்ல என்றால் சரியல்ல. கோவிலுக்கு வெளியேவரும் வாசலில் இடதுகைபக்கம் கோவிலின் மண்டபம் உள்ளது என்றால் சரிதான். அந்த மண்டபம் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டு இரண்டு குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஒரு வீட்டில் அபிமன்யு என்பவர் குடியிருந்து வருகிறார் என்றால் அந்த வீட்டில் உள்ள தம்பிமார்கள் பெயர்கள் தெரியும். ஒருவர் சந்தனமாரி ஆவார். எனது அப்பா யாரால் காயப்படுத்தப்பட்டார், எப்படி காயப்படுத்தப்பட்டார் என்ற விவரம் அபிமன்யு, சங்கர், சந்தமனாரி ஆகியோர் மற்றும் கோவிலுக்கு எதிரே உள்ள வீட்டில் இருந்தவர்களுக்கு தெரியும் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அபிமன்யு, சங்கர், சந்தமனாரி ஆகியோர் தான் எங்கள் வீட்டிற்கு வந்து யாரோ எனது அப்பாவை தாக்கி கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. அதன்பின்னர் தான் தங்களது தம்பியும், அம்மாவும் அப்பா காயம்பட்ட இடத்திற்கு சென்று 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவுடன் மருத்துவரிடம் எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். எனது அப்பாவை வெட்டிவிட்டார்கள், குத்திவிட்டார்கள் என்று சொன்னேன். மருத்துவர் என்னிடம் யார் என்ற விவரம் கேட்டபோது எனது பெயர் நவநீதகிருஷ்ணன் என்ற கிருஷ்ணன் என்று சொன்னேன். எனது அப்பா காயம்படுவதற்கு முன்னர் சுமார் 2 , 3 மணிநேரத்திற்கு முன் அரிசி உணவு சாப்பிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா காயம்படுவதற்கு முன்னர் 2 , 3 மணிநேரத்திற்கு முன் உணபு அருந்தினாரா என்று போலிசார் விசாரணையின்போது கேட்டார்களா

என்றால் கேட்கவில்லை. எனது அப்பா காயப்பட்ட தினத்தன்று வீட்டில் பொங்கல் விடப்பட்டது என்றால் அதிகாலை பொங்கல் விடப்பட்டது. அந்த பொங்கலை வைத்து எங்கள் வீட்டில் மதியம் 1.00 மணிக்கு பூஜை நடக்கும் என்றால் இல்லை. அன்று நான் மதியம் ஹோட்டலில் இருந்து சாப்பாடு வாங்கிவந்து சாப்பிட்டேன். மேலச்செவலில் சங்கரன் மகன் எனக்கு அறிமுகம் உண்டா என்றால் சங்கர் என்ற பெயரில் நிறைய பேர்கள் உள்ளார்கள். இந்த வழக்கில் மேலச்செவலை சேர்ந்த சங்கர் பற்றியோ, அவரது வாரிசுகள் பற்றியோ போலிசார் விசாரணையின் சொன்னேனா என்றால் எதிரிகளை பற்றி தான் சொன்னேன். அப்பாவின் பெயர்கள் எனக்கு ஞாபகமில்லை என்பதால் சங்கர் என்பவர் பற்றியோ, அவரது வாரிசுகள் பற்றியோ நான் சொல்லவில்லை. கோவில் வளாகத்திற்குள் மது அருந்திய சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அது சம்மந்தமாக எனது அப்பா மது அருந்தியவர்களை சத்தம்போடவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பாவோ, கோவில் நிர்வாகமோ கோவில் வளாகத்திற்குள் மது அருந்தியாக சொல்லி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்தாக சொல்லக்கூடிய புகாரிலோ, ஆய்வாளர் விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்திலோ, அப்பாவிற்கு சாப்பாடு எடுத்து சென்ற பாத்திரத்தை அப்பா காயம்பட்ட இடத்தின் அருகில் போட்டுவிட்டதாக சொல்லவில்லை என்றால் எந்த இடத்தில் போட்டேன் என்று எனக்கு ஞாபகமில்லை. அதுபற்றி நான் சொல்லவில்லை. 15.01.2023 அன்று மதியம் 1.45 மணிக்கு அப்பாக்கு சாப்பாடு கொண்டு கொடுக்கவேண்டிய வேலை தவிர வேறு நோக்கத்திற்கு கோவிலுக்கு செல்லவேண்டியது இல்லை என்றால் சரிதான். நான் கொடுத்தாக சொல்லக்கூடிய புகாரிலோ, ஆய்வாளர்

விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்திலோ, பொங்கல் அன்று அன்னாவி முடுக்கு தெருவில் நானும், தாசும் நின்றுகொண்டிருந்தபோது பாலசந்தர் பைக்கில் கொம்பையா மற்றும் பற்பநாதனும் பின்னால் அமாந்து கொண்டு, உனக்கு ஒரு நாள் இருக்கிறது என்று கூறியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த புகாரில் அவ்வாறு சொல்லப்பட்டுயிருந்தது. என்னிடம் காட்டப்பட்ட அ.சா.ஆ.1 புகாரில் அந்த விவரங்கள் இல்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் போன் செய்து வந்தபோது எனது அம்மா, பரமசிவன், ஈனமுத்து, நாட்டாமை சுப்பிரமணியன் என்ற மூக்காண்டி ஆகியோர்கள் வந்ததாக நான் எழுதிக்கொடுத்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளேன். என்னிடம் காட்டப்பட்ட அ.சா.ஆ.1 புகாரில் அந்த விவரங்கள் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா காயம்பட்ட கோவிலின் வெளிப்பிரகாத்தில் கிரிக்கெட் விளையாடுவார்கள் என்றால் பொதுவாக விளையாடுவார்கள். எனது அப்பா இறப்பதற்கு கொஞ்ச நாட்கள் முன்பு இருந்து விளையாடவில்லை. கோவிலின் வெளிப்பிரகார சுவர் கோவில் தளத்தில் இருந்து சுமார் 10 அடி உயரத்தில் இருக்கும் என்றால் தெரியாது. கோவிலின் உள் இருந்து பார்த்தால் வெளிப்பக்கம் பார்த்தால் வெளியில் உள்ள மரங்களின் மேல்பாகங்கள் தான் தெரியும் என்றும் என்றால் சரிதான். கோவிலுடைய மேற்குப்பக்கமும், வடக்பக்கம் வயக்காடுகள், தெற்குபக்கம் தெப்பக்குளம் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா காயம்பட்ட அன்று எங்கள் ஊரைச்சேர்ந்த நபர் தருவையில் ஒரு பையனை தாக்கியதாக போலிசார் எங்கள் ஊருக்கு விசாரணைக்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் வந்த பின்னர் எங்கள் ஊருக்கும் மோப்ப நாய்கள் கொண்டுவரப்பட்டது என்றால் எனக்கு

தெரியாது. எனது அப்பாவை காயம்படுத்த பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் ஆயுதங்களை நான் பார்த்தபோது அதில் அடையாளங்கள் இருந்ததா என்றால் ஆயுதங்களை தான் பார்த்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பிடியுடன் கூடிய கத்தியால் எனது அப்பா காயப்படுத்தபடவில்லை என்றால் சரியல்ல. கைப்பிடிப்போட்ட கத்தியால் எனது அப்பா காயப்படுத்தப்படவில்லைஎன்றால் சரியல்ல. எனது அப்பா காயப்படப்பட்ட தினத்திற்கு பின்னர் ஆயுதங்களை நீதிமன்றத்தில் தான் பார்த்தேனா என்றால் சம்பவ இடத்தில் பார்த்தபிறகு இன்று தான் பார்க்கிறேன். இந்த வழக்கில் மேற்படி ஆயுதங்கள் காவல் ஆய்வாளர் விசாரணையின்போது என்னிடம் காண்பித்து அடையாளம் காண்பித்தாரா என்றால் இல்லை. எனது அப்பா எப்படி காயம்ப்பட்டார் என்ற விவரம் தெரியாது என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ஆவணம் தன்னால் எழுதப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.